முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**முக்காலமும் உணர்ந்த முனிவனும் பொருளாதார மேதையுமான முருகப்பெருமான் அருளியது**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மாசி மாதம் 26ம் திகதி முதல் பங்குனி மாதம் 3ம் திகதி வரை**

**மார்ச் 10ம் திகதி முதல் மார்ச் 17ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **வீரர் பெரும்படை கொண்ட பாரதமே**
   **வேலவன் சக்தி கொண்ட தமிழகமே**
   **பாரதம் தமிழகம் தன்னில்**
   **பாடிடுவேன் விளம்பி சால் திங்கள் இருபானாற் திகதிமேல்**
2. **மேலாக சேல் திங்கள் சூலதிகதி வரை**
   **(விளம்பி வருடம் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 3ம் நாள் 17.03.2019, ஞாயிறு முடிய)**
   **மேன்மைபட நிகழ்வாக எதிர்கால பலனை**
   **காலமதில் சுப்பிரமணியர் யானும்**
   **கண்டுரைப்பேன் வார ஆசியாக**
3. **ஆகவே மக்களை காக்கும்**
   **ஆற்றல்மிக்க பாதுகாப்புத் துறை**
   **யுகமளவில் பெருமைப்படுத்தப்படும்**
   **உரைத்தாலும் உயிர்பலிக்கு விடை காணா நிலை**
4. **நிலைபடா தீவிரவாத சக்திகள்**
   **நிலவுலகில் இயங்கி வரவே நேரும்**
   **பிழைபடா அரசாக உருவாக**
   **பெருந்தன்மைபட ஆளுமைகள் மாற வேணும்**
5. **வேணுமப்பா தயவுமிக்க அரசாக**
   **வேலை வாய்ப்பு தரும் அரசாக**
   **ஞானம்மிக்க அரசாகவும்**
   **நன்மை ஏற்படும் வண்ணமே**
6. **வண்ணமாக மத்திய மாநில அரசு**
   **வல்லமை காட்டிட வேண்டும்**
   **திண்ணமுடன் தேர்தல் களமென**
   **துணை கொள்ளும் கட்சிகள் தானும்**
7. **தானும் தன் கொள்கை மறந்து**
   **தக்க வைக்கும் பதவி நோக்கில்**
   **ஞானமில்லா கூடிட நேரும்**
   **நம்பிக்கை இல்லா இவர்கள் கொள்கை**

8. கொள்கை மக்கள் சக்தி முன்
குவலயம் பார்க்க தலைகுனிவு காணும்
ஆள்பவர்கள் சேவை சிறக்க
ஆட்சி நடத்தினால்தான் மறுவாய்ப்பு

9. மறுவாய்ப்பு பேராண்மை என
மக்கள் சக்தி தயவுபெற நேரும்
ஆறுமுகன் யான் அன்னதனால்
அருளுவேன் கட்டளையாகவே

10. ஆகவே ஆளுமை புரிபவர்களே
அறம் மீறா துறையை வளர்க்க
மிகைபட ஞானவழி காட்டுகின்ற
முருகப்பெருமான் என் சக்தி அரங்க ஞானியை

11. ஞானியை கண்டு வணங்கி
நல் உபதேசம் ஏற்று நடக்க
கனிவு எனும் உயர்சிந்தை பெருகி
கலிவாழ் மக்களுக்கு ஏற்ற தலைவர்களாகி

12. ஆகியே பாரதம் தமிழகமும்
அகிலம் வியக்க வல்ல
மிகைபட தரும ஞான ஆட்சியாக
முன்னேறும் மாற்றம் பெறும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 3ம் நாள் 17.03.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

சக்திமிக்க வீரர்களை பெரும் படையாக கொண்டிட்ட பாரத தேசமே முருகப்பெருமானின் சக்தி கொண்ட தமிழகமே பாரதத்திலும் தமிழகத்திலும் விளம்பி வருடம் மாசி மாதம் 26ம் நாள் 10.03.2019, ஞாயிறு முதல் பங்குனி மாதம் 3ம் நாள் 17.03.2019 ஞாயிறு முடிய உள்ள கால அளவில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தேசத்தினில் உள்ள மக்களை காக்கின்ற பாதுகாப்புத் துறையானது உலகளவில் பெருமைமிக்கதாய் இருக்கும். உலகம் இந்திய பாதுகாப்பு துறையினை பெருமைப்படுத்தும். ஆனாலும் நடந்திடும் உயிர்பலிகளுக்கு விடை காணாத நிலையே இருக்கும். ஏனெனில் கட்டுப்பாடற்ற தீவிரவாத சக்திகள் எல்லாம் கட்டுப்படாமல் இந்த உலகினில் இன்னும் இயங்கி வருவதினால் உலகளவில் உயிர்பலிகள் தவிர்க்க முடியாததாய் இருக்கும்.

தவறற்ற நேர்மையான அரசாக உருவாக வேண்டுமென்றால், தீவிரவாத சக்திகளுக்கு இடம் கொடுக்காத நேர்மைமிக்க தலைமைகள் நாடுகளில் உருவாக வேண்டும். நாட்டினை ஆளும் அரசானது தயவுமிக்க அரசாக ஞானம்மிக்க அரசாக வேலை வாய்ப்புகளை மக்களுக்கு உருவாக்கி தருகின்ற அரசாக மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற அரசாக உருவாகிட வேண்டும். மத்திய அரசும் மாநில அரசுகளும் மக்கள் நலனை பெரிதாக மதித்து செயல்படும் அரசுகளாக ஆகிட வேண்டும். அவைஅவை மக்களுக்கு தீமை செய்யும் தீவிரவாத சக்திகளை கட்டுப்படுத்தி மக்களை காக்கும் வல்லமைமிக்க அரசுகளாக செயல்பட வேண்டும்.

தேர்தல் களத்தில் உறுதியுடன் துணைகட்சிகள் என தனித்தும் கூட்டணி அமைத்தும் போட்டியிடும். கட்சிகள் எல்லாம் அவையாவையும் தங்களது கொள்கைகளை மறந்து பதவியை தக்க வைக்கும் நோக்கத்தில் மட்டுமே ஞானமிலாது கொள்கைக்கு புறம்பாக கூட்டணி அமைத்திட நேர்ந்திடும்.

மக்களுக்கு நம்பிக்கை அளிக்க முடியாத இந்தவித அரசியல் கட்சிகளின் கொள்கைகள் எல்லாம் மக்கள் சக்தியின் முன்னால் உலகமே பார்க்கும்படி தலைகுனிய நேரிடும். நாட்டை ஆட்சி செய்பவர்கள் தன்னலமற்று மக்களுக்கு சேவை செய்திட்டால்தான் அவர்களுக்கு மறுபடியும் ஆட்சி செய்கின்ற வாய்ப்பு கிடைத்திடும், பேராண்மைமிக்க அரசாக ஆகி மக்களின் தயவினை அவர்கள் பெற்று மீண்டும் ஆட்சி பொறுப்பிற்கு வர முடியும்.

ஆதலினாலே முருகப்பெருமான் யானும் கட்டளையாகவே கூறுகிறேன். அது அவர்கள் மீது கொண்ட தயவினால் அருள் வாக்காய் உரைக்கின்றேன். ஆட்சி செய்பவர்களே தர்மத்தினின்று மாறாமல் உங்களது துறைகளை வளர்த்திட மிகைபட ஞானவழிதனை காட்டி வழிநடத்தும் முருகப்பெருமான் எனது சக்தி வடிவமாக அவதரித்துள்ள ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியை ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடிச் சென்று வணங்கி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து நல்உபதேசம் பெற்று நடந்திட உங்களுள் கனிவு என்கிற தயவுடைய உயர்வான சிந்தனைகள் பெருகி கலியுகத்தினில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் விரும்புகின்ற மக்களுக்கு ஏற்ற தலைவர்களாக மாறி பாரத தேசமும் தமிழகமும் உலகமே வியக்கும்படியாக வல்லமைமிக்க தரும ஞான ஆட்சியாக ஆட்சி செய்து பாரததேசமும் தமிழகமும் உலகினில் மிகச்சிறந்த நாடாய் பலவிதத்திலும் முன்னேற்றம் அடையும், நாட்டினில் அற்புதமான பல நல்ல மாற்றங்கள் எல்லாம் உருவாகிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–